Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 361 | செவ்வாய்க்கிழமை 22 நவம்பர் 2022 | கார்த்திகை 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ.50

# தமிழ்க் கட்சிகளுடன் பேச எந்தநேரமும் நான் தயார்!

## ரணில் பகிரங்க அறிவிப்பு



**கொழும்பு, நவம்பர் 22**

**தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் அவர்களுடன் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்த எந்நேரமும் நான் தயாராகவுள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

11 ➤

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில்

## தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை நிச்சயம் வழங்குவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 22
ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதற்கு வடக்கு மக்கள் தயார் இல்லை. எனது ஆட்சியின் கீழ் வடக்கு மக்களின் பிரச்சினை விரைந்து தீர்க்கப்படும்- என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின்

11 ➤

## ரயில் மோதியதில் நபரொருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்கன்குளம் பகுதியில் ரயில் மோதியதில் குடும்

11 ➤

## போதைப்பொருள்களுடன் யாழில் ஆறு பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும் அதை அண்டிய பகுதியி

11 ➤

## போதைமாத்திரையை விற்ற ஆசிரியர் கைது!

களுத்துறை, நவ. 22
களுத்துறை தெற்கில் சில காலமாக பாடசாலை மாணவர்களுக்குப் போதை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து ஆயி

11 ➤

## போதை மாத்திரையுடன் மூவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், நவ. 22
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ள

11 ➤

## சிறுமி துஷ்பிரயோகம் சகோதரன் கைதானார்

வவுனியா, நவ. 22
வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதேயான தனது தங்கை

11 ➤

## பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்க சு.க. முடிவு

கொழும்பு, நவ. 22
நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக வாக்களிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

11 ➤

பிறப்புச் சான்றிதழில்

## தேசிய இனத்தை நீக்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 22
பிறப்புச் சான்றிதழில் தேசிய இனம் என்பதை நீக்குவது குறித்த யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
பிறப்பு சான்றிதழில் தற்போது காணப்படும் சிங்களவர், தமிழர், பேகர், முஸ்லிம், இந்திய வம்சாவளியினர் போன்ற பதங்கள் நீக்கப்படும் வகையிலேயே இந்தப் பரிந்துரை முன்வைக் கப்பட்

11 ➤



## மாவீரர் வாரம் ஆரம்பம் தாயகத்தில் பேரெழுச்சி

யாழ்ப்பாணம், நவ. 22
மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலா யத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

11 ➤

எரிபொருள் இன்மையால் ஏற்பட்டுள்ள

## மீனவர்கள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்குக

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நாடாளுமன்றில் போராட்டம்

கொழும்பு, நவ. 22
மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்குமாறுகோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராச்சி நாடாளுமன்றத்தில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், டீசல் மற்றும் மண்ணெண்

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தோர் சகலரும் புலி ஆதரவாளர்கள் அல்லர்!

### சஜித் அணிக்கு வந்த ஞானம்



**கொழும்பு, நவ. 22**

**புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களோ, விடுதலைப்புலிகளோ அல்லர். அவர்கள் எமது நாட்டவர்கள். கடந்த காலங்களில் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அவற்றைச் சரிசெய்து கொண்டு அவர்களை எம் பக்கம் இழுக்கவேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்ற நாட்டுக்கு உதவி செய்ய விரும்புகின்ற புலம்பெயர் தமிழர்கள் அதிகம் உள்ளனர். அவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் அல்லர். இவர்களை நாம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

பொதுஜன பெரமுன அரசு இனவாதத்தைக் கக்கி ஆட்சிசெய்தமையாலே தான் நாட்டுக்கு இந்த நிலைமை. முதலில் இனவாதத்தை இல்லாதொழியுங்கள். அப்போதுதான் எல்லோரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை அபிவிருத்தி செய்வது பற்றிப் பேசலாம்.

வெளிநாட்டில் எமது வளங்கள் அதிகம் இருக்கின்றன. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களைக்கூட எமது பக்கம் எடுக்கின்ற திறமை எம்மிடம் இருக்க வேண்டும். அவர்கள் எமது நாட்டவர்கள். கடந்த காலங்களில் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அதைச் சரிசெய்து கொண்டு அவர்களை எம் பக்கம் இழுக்க வேண்டும் -என்றார். (ச-22)

## அ. அட்டை தொலைந்தால் இனி 2,500 ரூபா தண்டம்!

### ஆள்பதிவுத் திணைக்களம் தீர்மானம்

கொழும்பு, நவ. 22

தேசிய அடையாள அட்டையைத் தொலைத்து மீண்டும் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போரிடமிருந்து அபராதம் அறவிடுவதற்கு ஆள்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி அடையாள அட்டை காணாமற்போனதற்காக மீண்டும் விண்ணப்பிப்பவர்களிடம் 2 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படவுள்ளது.

15 வயது பூர்த்தியாகி ஒரு வருடத்துக்கு மேல் அடையாள அட்டையைப் பெறாமல் இருப்போர், குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 19 (2) இன் கீழ் இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்கள் முடிவதற்குள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கும் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் அறவிடப்படவுள்ளது.

ஆவணங்கள் மற்றும் தவறான தகவல்கள் உள்ளிட்ட போலியான சமர்ப்பிப்பு உட்பட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்துக் குற்றங்களுக்கும் 2ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பி.பீ.குணதிலக வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## நாட்டை மீட்டெடுப்பதற்கு இளையோரே ஒன்றுபடுக!

### சோசலிச இளைஞர் சங்க தேசிய அமைப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுக்க வந்தவர் அல்லர். ஊழல் மோசடியாளர்களை பாதுகாப்பதற்கே ஆட்சி அதிகாரத்தை அவர் கையில் எடுத்துள்ளார். அவரது ஆட்சியைக் கலைத்து புதிய நாடாளுமன்றை உருவாக்க இளைஞர் அணி ஒன்றுபடவேண்டும்.

இவ்வாறு சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார ரீதியாக நாட்டை ஆட்சியாளர்கள் பாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர். இனவாதத்தை மையமாகக் கொண்டு கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்து டீல்காரர்களுக்கு நாட்டை விற்றதன் காரணமாக நாம் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்றுணர்ந்த மக்கள் கிளர்ந்தெழுந்து கோத்தாபய அரசை விரட்டியடித்தனர்.

இந்நிலையில் திட்டம் தீட்டி தனது சேவகன் ரணில் ராஜபக்சவை ஆட்சி அதிகாரத்துக்குகொண்டு வந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுக்க வந்தவர் அல்லர். ஊழல் மோசடியாளர்களை பாதுகாப்பதற்கே அவர் ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளார். இந்த அரசாங்கம் வருமானத்தை ஈட்டுவதற்காக மக்கள் மீது வரிகளைத் திணித்து அவர்களை மேலும் நசுக்குகின்றது.

இன்று பாடசாலை மாணவர்கள் கற்றல் உபகரணங்களை வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இலவசக் கல்வி கேள்விக்குறியாகி விட்டது.

யூரியா, உரப்பிரச்சினை, கிருமிநாசினி போன்ற பல பிரச்சினைகளால் விவசாயிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடியை எடுத்துக் கொண்டால் எரிபொருள் பிரச்சினை, இந்திய மீனவர்களுடைய அத்துமீறல் போன்றவற்றுக்கு சரியான தீர்வு வழங்கப்படவில்லை. கடல் வளம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரை வாக்கப்படுகின்றது. காற்றாலை அமைக்க அதானி நிறுவனம் வருகின்றது. கடலட்டைப் பண்ணைக்கு சீனர்கள் வருகின்றார்கள்.

எனவே நாட்டை மேலும் வங்குரோத்தாக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைத்து புதிய நாடாளுமன்றத்தை வலியுறுத்தி இளைஞர்கள் அணி திரண்டு போராட வேண்டும் - என்றார். (ச-26)

## ஓட்டோ எரிபொருள் ஒதுக்கீடு பதிவுக்கட்டணம் 500 ரூபா!

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 22

அதிகரிக்கப்பட்ட அளவில் எரிபொருள் ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கு 500 ரூபா கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களுக்காக இந்தக் கட்டணம் அறவிடப்படும் எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழில்முறை பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகளுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை 5 லீற்றரிலிருந்து 10 லீற்றராக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பணிப்புரை விடுத்தார்.

அதனையடுத்து முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி எரிபொருள் ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கு 500 ரூபா கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் 25 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை முதல் அதிகரிக்கப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படவுள்ளது- என்றார். (ச-இ)

## விமலின் கருத்துக்களால் கோத்தாபய குழப்பத்தில்

கொழும்பு, நவ. 22

உத்தர லங்கா சபையின் தலைவர் விமல் வீரவன்ஸவின் கருத்துக்களால், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குழப்பமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த நிலையில், நாட்டை விட்டுச் செல்வதற்கு முன்னர் அவரைக் கொலை செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் விமல் வீரவன்ஸ அண்மையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்தச் செயற்பாட்டுக்கு அமெரிக்காவின் தூதுவரும் பங்காக இருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான தகவல்களை வெளியிட்டதையடுத்தே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குழப்பத்தில் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, விமல் வீரவன்ஸவின் கருத்தை அமெரிக்கத் தூதரகம் முழுமையாக நிராகரித்துள்ளது. (எ-14,இ)

# எரிபொருள் விலைச் சூத்திரம்; மாதத்தில் ஒருமுறையே மாற்றம்

### எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 22

எரிபொருள் விலைச் சூத்திரம் இனி மாதத்துக்கு ஒருமுறை மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படும். இது தொடர்பான பிரேரணை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கடந்த சனிக்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எரிபொருள் விலைச் சூத்திரம் மாதத்துக்கு இரண்டு முறை ஒவ்வொரு முதலாம் திகதி மற்றும் 15ஆம் திகதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

எனினும் விநியோகத்தர்களுக்கு நிதியிழப்பு ஏற்படும் என்பதால் இரு நாள்களுக்கு முன்பு எரிபொருளைக் கொள்வனவு செய்யாதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே எரிபொருள் விலைச் சூத்திரத்தை மாதத்துக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்த இது தொடர்பான பிரேரணை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மக்களின் உரிமை பிற்போட இடமளிக்கோம்!

## பொதுஜன பெரமுன கூறுகின்றது



கொழும்பு, நவ.22

**தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமை. உரிய காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. எனவே, தேர்தலை பிற்போடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கான மக்கள் ஆதரவு குறையவில்லை. 25 ஆயிரம் பேர் வீதிக்கு இறங்கினார்கள் என்பதற்காக எமது ஆதரவுத் தளம் சரியாது. முகநூலில் யார் என்னதான் எழுதினாலும் மக்கள் மனங்களில் மொட்டுதான் உள்ளது. தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது தெரியவரும்.

நாமும் தேர்தலை கோருகின்றோம். தேர்தலைப் பிற்போடுவதற்கு இடமளிக்கமாட்டோம். முன்கூட்டியே தேர்தலை நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுத்தான் ராஜபக்சக்களுக்கு உள்ளது - என்றார். (ஏ-44)

# ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 22

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில் ஹெரோய்னுடன் இளைஞர்கள் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 31 மில்லிகிராம் ஹெரோய்னுடன் துன்னாலை தெற்குக் கரவெட்டியைச்சேர்ந்த இளைஞர் ஒருவரையும் மேலும் 32 மில்லிகிராம் ஹெரோய்னுடன் நெல்லியடிப் பகுதியில் மற்றுமொரு இளைஞரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவருக்கும் எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஏ-14,125)

# மோட்டர் திருட்டு: 5 நபர்கள் கைது!

யாழ்ப்பாணம், நவ.22

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மோட்டர் திருட்டில் ஈடுபட்ட 5 நபர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழைப் பொலிஸாருக்குக் கிடைத்தப் புலனாய்வு தகவலுக்கமைய இளவாலை மற்றும் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை தெல்லிப்பழைப் பகுதியில் வைத்துக் கைது செய்தனர். சந்தேகநபர்களிடம் இருந்து 3 மோட்டர்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதையடுத்து சந்தேகநபர்கள் 5 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-14,125)

# போதைக்கு அடிமையான 8 பேருக்குப் புனர்வாழ்வு!

யாழ்ப்பாணம், நவ.22

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒருமாத காலப்பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ பரிசோதனைகளுக்கு அமைவாக 8 பேர் உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையானவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து நீதிமன்ற அனுமதியோடு அவர்கள் கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். (ச-125)

# பெருந்தோட்ட மக்கள் பட்டினியில் வாடுவது பொருளாதார அநீதியே!

## அருட்தந்தை மா.சக்திவேல் கவலை

கொழும்பு, நவ. 22

நாட்டுக்கு வருமானத்தை அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பட்டினியால் தொடர்ந்தும் வாடுகின்றனர். மலையகம் எனத் தாம் உருவாக்கிய தேசத்தில் 200 ஆண்டு காலமாக நில உரிமையற்ற மக்களாகவே வாழ வைக்கப்பட்டுள்ளனர். இதுவா பொருளாதார நீதி?

இவ்வாறு மலையக மக்களின் மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பின் ஆலோசகர் அருட்தந்தை மா.சக்திவேல் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட முன்மொழிவில் மலையக மக்களின் விடியலுக்கான எவ்வித திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. இது பேரினவாத அரசியலின் அரச முகத்தின் வெளிப்பாடு எனலாம்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டுக்குத் தேவையான வருமானத்தை அந்நியச் செலவாணியை தொடர்ந்து பெற்றுக்கொடுத்து வருகின்றனர். ஆனால், அவர்களோ பட்டினி வாழ்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இம்மக்களின் வாக்குகளை அள்ளிக் கொண்டவர்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களைத் திட்டமிட்ட பொருளாதார ரீதியிலான இன அழிப்புக்குள்ளாக்கி வருகின்றனர்.

அரச துறைக்குச் சொந்தமான பெருந்தோட்டத்துறை வெற்று காணிகள் குத்தகைக்கு கொடுக்கப்படும் என வரவு - செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் அது யாருக்கு கொடுக்கப்படும் என்று கூறவில்லை. 200 ஆண்டு காலமாக நில உரிமையற்ற மக்களாகவே அவர்கள் வாழ வைக்கப்பட்டுள்ளனர். இது அவர்களுக்குச் செய்துள்ள அரசியல் அநீதி மட்டுமல்ல பொருளாதார அநீதியுமாகும்.

எனவே பட்டினி வாழ்விலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் திட்டங்களை அரசு முன்மொழிந்து அவர்கள் தற்போது வாழுகின்ற வீட்டையும், பயிர் செய்யும் காணிகளையும் அவர்களுக்கே சொந்தமாக்கி இந்த நாட்டின் பிரஜைகளாக்குவதே நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த இருநூறு ஆண்டுகளாகப் போராடிய அவர்களுக்கு கௌரவத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அமையும் - என்றுள்ளது. (ச-22)

# விபுலானந்தர் வீதியில் குப்பை அகற்றவில்லை

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியில் குப்பைகள் அகற்றப்படுவதில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக இந்த நிலை காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ்.மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-14,20)



# சின்ன வெங்காயம் விலையுயர்வு

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாணம் குடாநாட்டு சந்தைகளில் சின்ன வெங்காயத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவற்றின் விலைகளும் சந்தைகளில் திடீரென அதிகரித்துள்ளன என நுகர்வோர் தெரிவித்தனர்.

சின்ன வெங்காயத்தின் நடுகைக் காலம் இன்னமும் ஆரம்பிக்கப்படாமையே இந்த விலையுயர்வுக்கு காரணம் என விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளில் தற்போது சின்ன வெங்காயம் கிலோ 500 ரூபாவுக்கும் பெரிய வெங்காயம் கிலோ 340 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.22

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று சுன்னாகம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 39 வயதான ஒருவரை சோதனைக்குட்படுத்தியபோது அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-14,125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
25.07.1942

கந்தனடியில்
22.11.2021

அமரர் திரு.
## மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்

ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியர்
உதயன் – சஞ்சீவி (ஓய்வு)

திதி 11.12.2022

இன்ப நிலை தேடும் வாழ்வில்
எழுத்தினையே இலட்சியமாக்கி
கத்திநுனியில் காலூன்றி
இன்னல்களையே உரமாக்கி - நல்
ஊடகரைத் துறைக்களித்து
யாம்பவானாய் வாழ்ந்திருந்தீர்!
அன்புநிறை உள்ளம் தாங்கி
நன்மகனாய் - நற்துணையாய்- நல்தலைவனாய்
ஆனந்தமாய் எமையணைத்து -நன்நெறி
வாழ்ந்து எமையும் வாழச் சுட்டி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்தீர்!
ஆண்டு ஒன்று ஆகின்றது - எம்மை
ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
மாவைக் கந்தனடிதான் எய்தி - ஜென்மபயன் கண்டீரே!
வேண்டுகிறோம் சாந்தி பெற ஆத்மார்த்தமாய்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்

(CS 21941 ) (3/6)

# பெருந்தோட்ட மக்களின் நலனில் ஜனாதிபதிக்கு அக்கறையில்லை!

## மனோ கணேசன் எம்.பி. குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், நவ. 22**

**இருநூற்றாண்டுக்கு மேலாக உழைத்து நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வைத்த பெருந்தோட்ட மக்களின் அவலநிலைமை குறித்து ஐ.நா. சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு பெருந்தோட்ட மக்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக்கேட்க வேண்டும்.**



இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில்,

ஐ.நா. சபை, பெருந்தோட்டப் புறங்களில் உணவின்மை 43 வீதமாகவும் உலக வங்கி, பெருந்தோட்டப் புறங்களில் வறுமை 53 வீதமாகவும் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ளன.

பெருந்தோட்ட கைத்தொழிற்றுறை கடந்த வருடம் 3.8 பில்லியன் டொலர் வருமானத்தை அரசுக்கு ஈட்டிக்கொடுத்துள்ளது. ஆனால் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் தெங்கு, கஞ்சா, மற்றும் கறுவா ஆகிய பயிர்களுக்கே அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையான தேயிலை, மற்றும் அந்தத் தொழிற்றுறை, பெருந்தோட்ட பகுதி சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக அப்பிரதேசங்களை வலுப்படுத்தும் எந்தவிதமான முன்மொழிவுகளும் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை.

200 வருடங்களாக உழைத்து நாட்டை உருவாக்கிய பெருந்தோட்ட மக்களின் இன்றைய நிலைமை பற்றி சர்வதேச சமூகம் சொல்லுவதைக் கேட்டு எம் நாட்டு ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகளின் தள வேறுபாடுகளை இன்று ஐக்கிய நாடுகள் சபையே புரிந்துகொண்டு எம்முடன் தனியாகப் பேசுகின்றது.

அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது வடக்குக்கு செல்வதைப் போன்று மலையகத்துக்கும் வருகைதந்து மலையக பெருந்தோட்ட சமூகத்தினரின் வாழ்வியல் பிரச்சினைகள் குறித்து கேட்டறியவேண்டும்.

முதலில் பெருந்தோட்ட மக்களுக்கு விசேட உணவு வழங்கல் மற்றும் ஒதுக்கீட்டுத் திட்டங்களை அவர் அறிவிக்கவேண்டும் - என்றார். (ச-22)

## ஓமானுக்கு பெண்கள் விற்பனை: பிரதான சந்கேநபருக்கு மறியல்!

கொழும்பு, நவ. 22

பெண்களை ஓமானுக்கு அழைத்துச்சென்று விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பிரதான சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கைப் பெண்களை சுற்றுலா விசாவில் ஓமானுக்கு அழைத்துச் சென்று அந்த நாட்டு வசதி படைத்த வர்த்தகர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். மொஹமட் றிஸ்வி மொஹமட் இன்பாஸ் (வயது- 44) என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட சந்தேகநபர், பெண்களின் கடத்தலுக்குத் தலைமை தாங்கியுள்ளார் என்றும் வத்தளையிலும் தெஹிவளையிலும் இரண்டு வீடுகளில் இரு பெண்களுடன் வசித்து வருகின்றார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக பல தடவைகள் அவரது வீட்டுக்குச் சென்றபோதும் அவர் வெளிநாடு சென்றிருந்ததால் அவரைக் கைது செய்ய முடியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் சந்தேகநபரை நீர்கொழும்பு பதில் நீதிவான் பிரிமல் அமரசிங்க முன்னிலையில், முற்படுத்தியபோது சந்தேகநபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தீர்வும் தீவும்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் 'அடுத்த சுதந்திர தினத்துக்குள் இனத்துவம் சார்ந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களாக ஒன்றிணைந்து கொண்டாடும் நிலை உருவாகிவிடுமென நம்புகின்றேன்' என்று வவுனியாவில் வைத்து சபதம் செய்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இத்தோடு சேர்த்து இரண்டாவது முறையாக 'அடுத்த சுதந்திரத்தினத்துக்குள் தீர்வு' என்ற உறுதிமொழியை ரணில் பகிரங்கமாக வழங்கியிருக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இருக்கும் அக்கறையை வெளிப்படுத்தும்விதமாக அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தால் அது வரவேற்கக்கூடியதே. ஆனால், எத்தனையோ சிங்களத் தலைவர்கள் இதேபோன்று இனப்பிரச்சினைக்கான தீவுக்கு காலநிர்ணயம் செய்து, காலத்தை இழுத்தடித்தார்களே தவிர உருப்படியாக எந்த ஆணியையும் அவர்கள் பிடுங்கவேயில்லை. இன்னும் சொல்லப்போனால், ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைத்தீயில் எண்ணெயை ஊற்றி இன்னும் அதனை பற்றவைக்கத்தான் அவர்கள் இந்தக் காலநிர்ணயத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள். இப்படியாக சூடுகண்ட பல அனுபங்கள் இருப்பதால், ரணிலின் உறுதிமொழியை தமிழ் மக்கள் சந்தேகத்தோடுதான் நோக்குகின்றனர்.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்தபோதே, இனப்பிரச்சினையும் முளைகொள்ளத் தொடங்கிவிட்டது. அப்படியானால் இனப்பிரச்சினைக்கும் வயது 75ஆகப் போகின்றது. போர் நடந்த காலத்தில் தங்கள் முகாம்களை விட்டு பின்வாங்க நேரும் சந்தர்ப்பங்களில் படையினரும் புலிகளும் தங்கள் எதிர்த்தரப்பினருக்கு சேதத்தை உண்டு பண்ண மிதிவெடிகள், பொறிவெடிகளை ஆங்காங்கே புதைத்துவிட்டுப் போவதுண்டு. அதேபோன்று, தாங்கள் இலங்கையை விட்டுப் போனாலும்கூட, இந்த நாடு உருப்படாமல் இருப்பதற்காகத்தான் இனப்பிரச்சினைக்கான அடிப்படை முரண்களை பிரிட்டன் ஆட்சியாளர்கள் உருவாக்கிவிட்டுப் போயிருக்கவும் கூடும். ஏனெனில் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தான் இனமுரண்பாடு நாட்டில் கூர்மையடைந்து, அடக்குமுறைகள், கலவரங்கள், பேச்சுகள், ஒப்பந்தங்கள், ஒப்பந்தக் கிழிப்புகள் எனத் தொடர்ந்து இறுதியில் அது ஆயுதப்போராட்டம், இனவழிப்பு, படுகொலை என்று விரிந்தது. இலங்கை இப்போது குட்டிச்சுவராக கெட்டழிந்து நிற்பதற்கும் அடிப்படைக் காரணம், தசாப்தக் கணக்கில் நீடித்து நிற்கும் இனமோதுகைகளின் விளைவுகளே.


மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக எரிந்த போர் முடிவுக்கு வந்து 13வருடங்கள்கழிந்த பின்னரும் கூட, மீண்டும் பழைய புள்ளியிலேயே எங்கு தொடங்கியதோ அதே இடத்திலேயே இனப்பிரச்சினை விவகாரம் வந்து நிற்கின்றது. ஆயுதப்போராட்டத்தை தமிழ் மக்கள் தொடங்குவதற்கு என்னென்ன வகையிலான அடக்குமுறைகள், அழுத்தங்கள் என்பவற்றை சிங்களப் பெருந்தேசியம் பிரயோகித்ததோ அதே உத்தியை அதே பேரினவாதம் இப்போது மீளக் கையில் எடுத்துள்ளது. நில அபகரிப்பு, தொல்லியலின் பெயரால் ஆக்கிரமிப்பு, தமிழ் மொழிப்புறக்கணிப்பு, இனத்துவப் பாகுபாடுகள், நினைவேந்தல்களுக்கானதடைகள், பௌத்தத்தை மட்டுமே முதன்மைப் படுத்தி ஏனைய மதங்களை இல்லாதாக்கும் முயற்சிகள், இழுத்தடிப்புகள் என்று சிங்களப் பேரின அரசு, மீண்டும் இனப்பிரச்சினை விவகாரம் பற்றியெரிவதற்கான ஏதுநிலைகளை வலிந்து உருவாக்கத் தொடங்கியிருக்கின்றது.

இப்படி ஒரு பக்கம் இனவாதத் தீயை மூண்டெழ வைப்பதற்கான முயற்சிகளை ஊக்குவித்தபடி, மறுபுறத்தே 'ஒரு தாய் மக்களாக 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிலை வரும். அதற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும்' என்று சொல்வதெல்லாம் வெறும் ஒப்பாசாரத்துக்கேயன்றி, வேறெதற்குமல்ல. அதிர்ஷ்டத்தில் ஆட்சிக்கு வந்த ரணிலால் ஒரு சில மாதங்களிலேயே இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வல்லமை இருக்குமானால் அதனை அவர் நல்லாட்சிக் காலத்திலேயே செய்திருக்கலாமே. ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர்கள்தான் தீர்வைக் காணக்கூடியவர்களா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஐ.நா.வையும், உலக வங்கியையும், சர்வதேச நாணய நிதியத்தையும் சமாளிப்பதற்காகவே 'சுதந்திர தினத்துக்குள் தீர்வு' என்ற பசப்பு வார்த்தைகளை ரணில் உச்சரிக்கத் தொடங்கியிருக்கிறார். நரியின் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு காகம் வடையை இழந்தது போல, ரணிலின் 'சுதந்திர தினத்துக்குள் தீர்வு' என்ற கானல்வார்த்தைகளில் தமிழினம் மயங்காதிருக்க வேண்டும். ரணிலோ, மஹிந்தவோ, சஜித்தோ, அநுரகுமாரவோ எல்லோருமே அடிப்படையில் சிங்களப் பெருந்தேசியக் குட்டையில் ஊறிய ஒரே மட்டைகளே. எனவே அவர்களில் எவரும் தீர்வையும் தரப்போவதில்லை, இந்தத் தீவையும் மீட்டெடுக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

–அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர்)




# பிரேரணை நிறைவேற்றாவிட்டால் தேர்தல் உரிய நேரத்தில் நடக்கும்!

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ.22**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்படாவிட்டால், தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது. பெரும்பாலும் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டியேற்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிரதமரால் அமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற எல்லைகளை நிர்ணயிக்கும் குழுவை வைத்துக் கொண்டு தேர்தலைப் பிற்போடும் செயற்பாடு இடம்பெறலாம் என்ற சந்தேகம் எதிர்க்கட்சிகள் மத்தியில் எழுந்துள்ளது.

இதை அரசாங்கம் மறுத்துள்ள போதும், அரசாங்கத்துக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் பொதுஜன பெரமுனவின் ஆதரவு என்பன தேர்தல் பிரேரணையை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்குத் துணையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனினும் பிரேரணை நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டியேற்படும் - என்றார்.

இதேவேளை பஸில் ராஜபக்சவின் வருகை, வரவு - செலவுத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதே என்று கூறப்பட்டாலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்களுக்காகவும் பஸிலின் வருகை முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று பெரமுன தெரிவித்துள்ளது. ஆனால், நாட்டின் இன்றைய நிலைவரங்களுக்குள் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால், நிச்சயமாக அதில் பொதுஜன பெரமுனவுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகையால் தேர்தலை ஒத்திவைப்பதில் பெரமுன கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ளும் என்றே கருதப்படுகிறது. (எ-14,இ)

# 56,000 குழந்தைகளுக்கு போசாக்கு குறைபாடு!

கொழும்பு, நவ.22

இலங்கையில் உள்ள சுமார் 56 ஆயிரம் குழந்தைகள், கடுமையான போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அவசர சிகிச்சை தேவைப்படுகின்றது என்றும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 22 இலட்சம் குழந்தைகளுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகின்றது என்றும், 4.8 மில்லியன் குழந்தைகளுக்கு கல்விக்கான அணுகல் கிடைக்க வேண்டும் எனவும் யுனிசெப் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் மக்கள் மிதமான உணவுப் பற்றாக்குறையாலும், 66 ஆயிரம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை உணவுப் பாதுகாப்பின்மை மோசமடையும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 23.11.2022 புதன்கிழமை கார்த்திகை 07

சுபநேரம் : 04.41 - 06.11
ராகுகாலம்: 12.11 - 01.41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சர் பதவிக்கு அரசாங்கத்தில் பிடுங்குப்பாடு

**கொழும்பு, நவ. 22**

**ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு சுகாதார அமைச்சர் பதவியை வழங்குவதற்கு தற்போதைய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.**

அதேநேரம், சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் சுகாதார அமைச்சர் பதவியை விரும்புகின்றது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இந்த நிலைமையால் ராஜித சேனாரத்ன, அரசாங்கத்துடன் இணைவது மேலும் தாமதமாகி வருகின்றது என்றும், அவர் அரசுடன் இணைந்தால் அவருக்கு வேறு அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. (எ-14,இ)

# INVITATION FOR BID 2022/05
## Regional Directorate of Health Service Jaffna.

01. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
04. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
05. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
08. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
09. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | | From 22.11.2022 until 13.12.2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 2.30 P.M on 30.11.2022 | | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 14.12.2022 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | | |
| | | | | | | Security Amount | Validity Period | |
| NP/04/41/2022/ PSSP/W/23 | Completion of Balance work to accident and Emergency unit building at base hospital chavakachcheri,Jaffna. | 16.88 | 168Days | C6 and C5 (Buildings) | 5,000.00 | 169,000.00 | Till 29.03.2023 | |

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | | From 22.11.2022 until 06.12.2022 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 2.30 P.M on 29.11.2022 | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 07.12.2022 | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2022/ PSSP/W/24 | Improvement of Internal Road to Health Department at Pannai in Jaffna.. | 2.04 | 80Days | C8 and C7 (Highway) | 3,500.00 | 21,000.00 | Till 22.02.2023 |
| NP/04/41/2022/ PSSP/W/02 | Construction of Vehicle park (Type I) Pannai. | 1.41 | 74Days | C8 and C7 (Buildings) | 3,500.00 | 15,000.00 | Till 22.02.2023 |
| NP/04/41/2022/ PSSP/W/04 | Construction of Vehicle park (Type II) Pannai. | 1.06 | 71Days | C9 and C8 (Buildings) | 3,500.00 | 11,000.00 | Till 22.02.2023 |
| NP/04/41/2022/ PSSP/W/25 | Improvement work at AMC Health village pannai,Jaffna | 0.64 | 60Days | C9 and C8 (Buildings) | 3,500.00 | 7,000.00 | Till 22.02.2023 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated ,09.10.2020 and 11.01.2020 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service. Jaffna.**

(CR 38510)(3/6)

# பஸிலை சந்தித்த அதிகாரியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்

*நளின் பண்டார எம்.பி கோரிக்கை*

கொழும்பு, நவ.22

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவை சந்தித்த பொலிஸ் ஆணைக்குழுத் தலைவரை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் இந்தக் கோரிக்கையை விடுத்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜ பக்ச நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பினார். நாடு திரும்பிய பஸிலை பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் எம்.பி. பெரேரா ஆகியோர் சந்தித்தனர்.

பஸிலை சந்தித்த இரு அதிகாரிகளும் உடனடியாகப் பொலிஸ் ஆணைக்குழுவிலிருந்து நீக்கப்படவேண்டும்-என்றார். (எ-14,இ)

# பஸிலின் வருகையால் எதிரணி கலக்கமாம்!

*கூறுகிறார் ரோஹித*

கொழும்பு, நவ. 22

பஸில் ராஜபக்சவின் வருகையால் எதிரணிகள் பீதியிலுள்ளன. அதனால்தான் அவருக்கு எதிராக சேறுபூசும் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

பஸில் ராஜபக்ச செல்லாக் காசாகிவிட்டார், அவரால் எதுவும் தற்போது முடியாது என சூளுரைத்து வந்த எதிர்க்கட்சிகள் அவரின் வருகையால் கலக்கமடைந்துள்ளன. மண்ணெண்ணெய் பட்ட பாம்புபோல துடிக்கின் றன.பஸிலுக்கு எதற்காக இவ்வளவு பயம்? அவர் செல்லாக் காசெனில் எதற்காக அஞ்சவேண்டும்? பொய்கள் புயல்போல் வீசும். உண்மைதான் வெல்லும். அதற்கு காலம் எடுக்கும். அந்தவகையில் பஸில் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பது தெரியவரும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தாலும் மொட்டு கட்சிக்கு பஸில் ராஜபக்சவே தலைமைத்துவம் வழங்குவார்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ.22
பருத்தித்துறையில் நீதிமன்ற வீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் மாவீரர் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
பொது ஈகைச் சுடரை இரண்டு மாவீரர்களின் பெற்றோர் ஏற்றினர். மாவீரர்களுக்கான அக வணக்கத்தைத் தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.
எதிர்வரும் 27 ஆம் திகதிவரை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி செயலாளர் திருமதி கிருபா கிரிதரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (எ-20)



# பண்டிவிரிச்சான் துயிலுமில்ல துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

மன்னார், நவ.22
மாவீரர் வார ஆரம்ப நாளான நேற்றுப் பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
இந்த வாரம் முழுவதும் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
மாவீரர் நாளான நவம்பர் 27 அன்று உணர்வு பூர்வமாக மாவீரர் நாள் பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில் கடைப்பிடிக்கப்படவுள்ளது என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. துப்புரவாக்கல் பணிகளில் மாவீரர்களின் உறவுகளுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்துகொண்டார். (எ-213)

# கட்சி பேதமின்றி நினைவேந்துவோம்!

அம்பாறை, நவ.22
கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் கட்சி பேதமின்றி வழமை போன்று முன்னாள் போராளிகளின் தலைமையிலேயே மாவீரர் தின நிகழ்வு முன்னெடுக்கப்படும். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என முன்னாள் போராளியான நாகமணி கிருஸ்ணபிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
கஞ்சிக்குடிச்சாறு துயிலும் இல்லத்தில் வழமை போன்று மாவீரர் தின ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. மாவீரர் தின ஏற்பாடுகளுக்காக மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவுப் பணிகளை கட்சி பேதங்களின்றி அனைத்துத் தரப்பினரும் முன்னெடுத்து வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றார்கள். ஆனால் நாங்கள் வழமைபோன்று முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கவுள்ளோம்.
இது மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு இதற்கு கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரின், அனைத்து மக்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் இருக்கவேண்டும். எதிர்வரும் 27ஆம் திகதி மிகவும் எழுச்சியுடன் இந்த நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்- என்றார். (எ-150)

# நாடாளுமன்றத்தில் மாவீரருக்கு அஞ்சலி

கொழும்பு, நவ.22
நாடாளுமன்றத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், நேற்றுச் சபை அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.
தனது உரையை ஆரம்பிக்கும் போது, இன்று மாவீரர் வாரம் ஆரம்பமாகின்றது. அவர்களுக்கு முதலில் அஞ்சலியை இதயபூர்வமாக செய்து கொண்டு எனது உரையைத் தொடர்கின்றேன்-என்றார். (எ-22)



# சாட்டியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.22
சாட்டி துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. ஈகைச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. மாவீரர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (எ-27)



# யாழ். பல்கலையில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ.22
மாவீரர் நினைவேந்தல் வாரத்தின் முதல்நாளான நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள மாவீரர் தூபியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.
இந்தவாரம் முழுவதும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும் என்றும், எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)





# வாகரை துயிலுமில்லமும் சிரமதானம் மூலம் துப்புரவு

மன்னார், நவ.22
மாவீரர் வாரம் நேற்று ஆரம்பித்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவீரர் துயிலும் இல்லங்களைச் செம்மைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
மாவீரர் தின நினைவேந்தல் ஏற்பாட்டுப் பொதுக்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் நேற்று வாகரை கண்டலடி துயிலுமில்லத்தைத் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் உதவியுடனே ரணில் ஜனாதிபதியானார்! என்கிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ.22

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உதவியுடனேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதனால் ஜனாதிபதி தரப்பும் பெரமுன தரப்பும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். இவ்வாறான நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுன நிபந்தனைகளின்றி வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் என்று ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் காணப்படும் நிலைமையின் அடிப்படையில், ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவளிக்க பொதுஜன பெரமுன எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. நாங்கள் கட்சி என்ற வகையில் வரவு- செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கி, நாடு தற்போது எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க கூடுதலான ஒத்துழைப்புகளை வழங்குவோம். ஜனாதிபதியுடன் இணக்கப்பாட்டுடன் வேலை செய்கின்றோமே அன்றி எமக்கிடையில் எந்த நிபந்தனைகளும் இல்லை- என்றார். (எ-14.இ)

## துனுக்காய் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கமைய துனுக்காய் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2022.11.22 ஆம் திகதியிலிருந்து 2022.12.05 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பிரதேச சபையிலும் சபையின் நூல் நிலையங்கள் மற்றும் சனசமூக நிலையங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

அ.அமிர்தலிங்கம்
தவிசாளர்,
பிரதேச சபை, துனுக்காய்.

(IN 18254)(3/6)

## The Vembadi Girls' High School Old Girls' Association - Jaffna.

Further to the notice published on 29 October2022, the Annual General Meeting will be held as scheduled on

**Date : 04 th December 2022**
**Time : 9AM**
**Venue : Trimmer Hall Vembadi Road,**
*(Opposite to the road between Central college and central Playground)*

**All Members of Vembadi Girls' High School old Girls' Association, Jaffna are WEL COME**

New Member are Welcome to JOIN our ASSOCIATION at the AGM or through online https://www.facebook.com/VOGAJaffna

*Mrs. S.Sivathas,*
**Secretary**

(CS 21937) (3/6)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கருவாட்டுக்கடைக்கு சிங்களம் பேசக்கூடிய வேலையாள்கள் தேவை.

(CS 21940) (3/6) தொடர்பு : 077 222 8312

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10.09.1939 மறைவு 18.11.2022

எமது பாடசாலை அதிபர் திருமதி ரோகினி தயானந்தன் அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் திருமதி**
**திலகமணி தவமணிநாயகம்**

கடந்த 18.11.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி கேள்வியுற்று துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS 47786) (3/6)

பாடசாலை சமூகம்
யா/ சதானந்தா வித்தியாலயம்
அளவெட்டி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின் சமூர்த்தி வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றும் திரு. விஜேந்திரன் அவர்களின் அன்பு மகன்

**விஜேந்திரன்**
**சயந்தன்**



தோற்றம் 18.04.2000 மறைவு 19.11.2022

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,**
**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் - வேலணை.**

(CS 21944)(3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 - 03 - 1941



உதிர்வு 23 - 10 - 2022

கடந்த 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் அப்பாக்குட்டி சண்முகலிங்கம்

ஈன்று புறந்தந்து இன்னமுதூட்டி
இதயத்தில் எமை வைத்து இனிதனித்து
தோன்று துணையாய் தெய்வமாய் நீர்
தொல்லுலகில் நாம் வாழ வழி சமைத்தீர்
உம்மை உருக்கி உழைத்தீர்
உண்மையாகவே வாழ்ந்தீர்
இம் மாநிலத்தில் எளிமை காட்டி

இரக்கம் பணிவு பழக்கி பண்பாடு காட்டி
பட்டம் பதவி பாரில் உயர்வாழ்வு
பரவசமாய் எமக்களித்த காருண்யரே
விட்டுலகு போகும் போது என்ன
- நினைத்தீர்
விண்ணும் மண்ணும் உள்ளவரை
இதயத்தில் வாழ்வீர்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CCS 47785 ) (3/6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 - 09 - 1942



இறப்பு 02 - 12 - 2021

யாழ். மீசாலை வடக்கு கொடிகாமம் இராமாவிலைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

### ஐயம்பிள்ளை ஐயாத்துரை

அவர்களின்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

**திதி : அபரபக்க சதுர்த்தசி**

வாழ்க்கை என்னும் பாதையிலே
எம்மோடு பயணித்த தெய்வமே!

ஏன் விண்ணுலகம்
நிரந்தரமாய் விரைந்தீரோ?

இன்றுடன் ஓராண்டு
முடிந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு விலகாது

ஓராண்டு என்ன ஓராயிரம்
வருடங்கள் ஆனாலும் உங்கள்
நினைவாய் வாழ்ந்திடுவோம்!!!

உங்களையே உலகமென
உறுதியாய் நாமிருக்க

உங்கள் ஆத்மா ஆண்டவனின் திருவடியில்
அமைதி பெற வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**தொடர்புகளுக்கு: 077 071 1525**
**077 641 3085**

(CR 7074 ) (3/6)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப முறையில் ஒட்டுசுட்டானில் வயல்விழா

முல்லைத்தீவு, நவ. 22

**ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வித்தியாபுரம் கிராமத்தில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை தொழில்நுட்ப முறையில் வயல் விழா சிறப்புற்றது.**



காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன விவசாயத் திட்ட நிறுவனத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பரசூட் முறை மூலமான நாற்று நடுகை, இயந்திர நாற்றுநடுகை, 'ரம்' விதையிடும் கருவி மூலமான விதைப்பு ஆகிய 3 தொழில்நுட்ப முறைகளில் நாற்றுகள் நடப்பட்டன. அத்துடன் விவசாயிகளுக்கு குறித்த 3 தொழில்நுட்ப விதைப்பு முறைகள் குறித்து செய்முறை ரீதியாக விளக்கமும் விவசாய நிபுணர்களால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர், முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர், காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன விவசாயத் திட்டத் தின் விவசாய நிபுணர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒட்டுசுட்டான் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)

# சட்டவிரோதமாக கல்அகழ்வு கோப்பாயில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 22

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு கரந்தன் பகுதியில் சட்டவிரோதமாக கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.



கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது. ஊரெழு பகுதியைச் சேர்ந்த 29 வயதான ஒருவரே கைதாகியுள்ளார். அத்துடன் கல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 22

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் மனைப்பொருளியல் டிப்ளோமா தரச்சான்றிதழ் கற்கைநெறிக்கு பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கற்கைநெறியைக் கற்கவிரும்புவோர் யாழ்ப்பாணப் பிரதேசசெயலகப் பிரிவில் வசிக்கும் க.பொ.த சாதாரண தரம் படித்த 18-35 வயதுக்கு உட்பட்டோர் யாழ்ப்பாணப் பிரதேசசெயலகத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிரதேசசெயலர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# சாவ. நகரசபை சொத்துக்கள் தனியாரால் கையகப்படுத்தல்

*ஒப்படைக்குமாறு தவிசாளர் அறிவிப்பு*

சாவகச்சேரி, நவ. 22

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சபையின் சொத்துக்கள் தனியாரால் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றை உடன் விடுத்து சபையிடம் ஒப்படைக்கவேண்டும். இவ்வாறு சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார். சபையின் சொத்துக்களான கிணறுகள், கேணிகள், மலசலகூடங்கள் அமைந்திருந்த காணிகளை சிலர் உரிமைகோரி மறைத்து அடைத்து வைத்துள்ளனர். இவ்வாறு சபையின் சொத்துக்களை மறைத்து உரிமை கோர முயற்சிப்பது சட்டப்படி குற்றம். அவ்வாறு சபையின் காணிகளை மறைத்து கையகப்படுத்தியுள்ளோர் அவற்றை விடுவித்து சபையிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். சபையின் சொத்துக்கள் அமைந்துள்ள காணி பற்றிய விவரங்கள் தெரிந்தோர் சபையுடன் உடன் தொடர்புகொண்டு அறிவிக்கவும். தகவல் தருவோரின் விவரங்கள் பகிரப்படமாட்டாது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-9)







வாழ்க்கையில் எத்தகைய தடைகள் வந்தாலும் நீங்கள் விழுந்து விடமாட்டீர்கள். மனத்தில் தைரியத்தை வரவழைத்து உங்கள் கால்களை இந்த பூமியில் பதித்து, உங்களால் இயன்ற உயரத்திற்கு எழுந்து நில்லுங்கள். நம்பிக்கையான முறையில் உங்களுக்கு பலமாக நாங்கள் இருக்கின்றோம்

அனைவரையும் அழைத்துக் கொண்டு
முன்னோக்கிச் செல்வோம்

PEOPLE'S LEASING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நீலையினார் மனோகரன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, யா/மட்டுவில் மகா வித்தியாலயம்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீலையினார் மனோகரன் (ஓய்வுபெற்ற அதிபர், யா/புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, யா/ மட்டுவில் மகாவித்தியாலயம்) அவர்கள் நேற்று (21.11.2022) காலை இயற்கை எய்தினார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், ரவிகரன், உமாகரன், சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகிழ்நங்கை, கவிதா ஆகியோரின் மாமனாரும், லக்சனா, லக்ஸ்மன், கவிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.11.2022) பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டையடி தாவு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:071 9777 514, 0064211389403

(CS 21948)1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 04 . 2000

மறைவு 19 . 11 . 2022



## செல்வன் விஜயேந்திரன் சஜிந்தன்

(நயினாதீவு)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல-8 செம்பாட்டு ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் விஜயேந்திரன் சஜிந்தன் அவர்கள் கடந்த (19.11.2022) சனிக்கிழமை கொக்குவிலில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் விஜயேந்திரன் (சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர், வேலணை) கேதாரகௌரி தம்பதியினரின் ஏக புதல்வனும், விதுர்ஷனாவின் (முதலாம் வருட மாணவி, கிழக்குப் பல்கலைக் கழகம்) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சரோஜினிதேவி, காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், கேதீஸ்வரன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) - சிவகஜனி, பரமேஸ்வரன் - ரஞ்சிதாதேவி (ஜேர்மனி), சுதாகரன் - ராஜினி (ஜேர்மனி), விஜய குமார், இராசசூரியர் - திருவருட்செல்வி (ஜேர்மனி), உதயேந்திரன் - அருட்செல்வி (சுவிற்சலாந்து), புஸ்பராசா - கமலரூபி ஆகியோரின் பெறாமகனும், யோக ரெத்தினம் - புவனேஸ்வரி, ஸ்ரீதரன் - பரிமளாதேவி (நோர்வே), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் நாகேஸ்வரி, சுதர்சன் - தர்சினி (பிரான்ஸ்), தயாளன் - தனுஷியா, கருணாகரன் - கஜேந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும், யோகீதன், சுபாங்கன், யதுஷனன், அபிராஜ், அபிகணன், அபிரங்கன், சாருஜன், ஹாருஜன், அஷ்வின், ரகுநாத், ராகவி, ஸ்ரீநாத், மதுஷா, தனுஷன், லோஜனன் ஆகியோரின் உடன்பிறவா பாசமிகு சகோதரனும், பாஷினி, உஷாலினி, கவிராஜ், கஸ்தூரி, சாஜகி, வினுஷன், சானுஜன், துஷ்யந்தன், கௌதமன், கஜலக்ஷன், அபிஷன், கபிஷ்னா, அபிஷாஜி, ஹரிஸ்ராகவ், நத்தன், நவிந், நதர்ஷா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2022) புதன்கிழமை காலை 6.30 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.8, செம்பாட்டு ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே.இல:077 255 1146, 077 454 9756

தகவல்:
குடும்பத்தினர்.

# 13 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், நவ. 22

அத்துமீறிய மீன்பிடிக் குற்றத்துக்காக பருத்தித்துறைக் கடற்பரப்பில்வைத்து கைதுசெய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களில், ஒருவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன் ஏனையவர்கள் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி 14 மீனவர்களும் கடந்த 16ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் 14 மீனவர்களில் ஒருவர் சிறுவனாக இருந்தமையால் அவரின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அந்த நபரை வழக்கிலிருந்து முற்றாக விடுவித்தது. ஏனைய 13 பேரும் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 4 மாதங்கள் என்ற அடிப்படையில் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மீரிகான இடைத்தங்கல் முகாம் ஊடாக அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளனர். இந்திய மீனவர்களின் படகும் மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல்செய்யப்பட்டன.

(அ-ம-26-27)

# பெரமுன எம்.பிக்கள், பிரதிநிதிகள் சுதந்திரக்கட்சியில் இணையுங்கள்

*சு.க. பொதுச் செயலாளர் அழைப்பு*

கொழும்பு, நவ.22

சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணையவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர பகிரங்கமான அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் கட்சி என்ற அடிப்படையில் தொடர்ந்தும் மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்காது என்பதால், அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் இணைவதற்குப் பொருத்தமான கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி. பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தபோது, அவர்களை சுதந்திரக்கட்சியில் இணையவேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோதும், அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

பெரமுனவினர் ஐக்கிய மக்கள் சக்தியை விட, பொதுஜன பெரமுனவின் தாய்க் கட்சியான சுதந்திரக்கட்சியில் இணைவது மிகவும் பொருத்தமான தாக இருக்கும்- என்றார். (எ-14,இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1938

மறைவு 21 . 11 . 2022



## முத்துக்குமாரு இராஜலட்சுமி

38, இராஜ வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு இராஜலட்சுமி அவர்கள் நேற்று (21.11.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் முத்துக்குமாருவின் பாசமிகு மனைவியும், அமரர் தம்பு செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு புத்திரியும், அமரர்களான த.மாணிக்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், குணசீலன், சத்தியசீலன் (ஜேர்மனி), சத்தியபாமா (ஜேர்மனி), கலைவாணி (ஆசிரியை-செங்குந்தா இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் தேவசீலன் ஆகியோரின் பாசமிகு அன்னையும், சுசரிதா (ஆசிரியை-கோப்பாய் மகா வித்தியாலயம்), வசந்தராணி (ஜேர்மனி), வாகீசன் (ஜேர்மனி), விமலநாதன் (உப அதிபர்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), அனிதா, சுரேகா (ஆசிரியை-குனுபிட்டிய சாகிரா ம.வி) ஆகியோரின் அன்புமாமியும், மிருபா, ஜருணி, யுகர்ணி, யஸ்வினி, யாதவன், ராகவி, சதுர்த்திகா, சாகினியா, பூபாலன், அர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.38, இராஜவீதியில் உள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக இன்று (22.11.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
38, இராஜ வீதி, நல்லூர். மு.குணசீலன் (மகன்)

(CS 7081) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடியாணைக்கு 'டிமிக்கி'; மறைந்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 22



நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகச் செல்லாமல் மூன்று தடவைகள் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் பல்வேறுபட்ட திருட்டு வழக்குகளுடன் தொடர்புடையவர். நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வராததையடுத்து அவர் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தேடப்பட்டு வந்தார். இந்த நிலையிலேயே மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)

# 50 லீற். கசிப்புடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 22

புத்தூர்- வீரவாணிப் பகுதியில் வைத்து 50 லீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், உப பொலிஸ் பரிசோதகர் சத்துசங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-23)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், நவ. 22

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் 26 வயதான இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்

புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையிலேயே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-125)

## தமிழ்க் கட்சிகளுடன்...

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் எப்போது பேச்சை ஆரம்பிக்கவுள்ளீர்கள் என்று ஜனாதிபதியிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தமிழ்க் கட்சிகளைப் பேச்சுக்கு வருமாறு நாடாளுமன்றத்தில் வைத்து நான் பகிரங்க அழைப்பை விடுத் துள்ளேன்.

தமிழ்க் கட்சிகள் முன்வந்தால் பேச்சை எந்நேரமும் ஆரம்பிக்க நான் தயாராகவுள்ளேன். எந்தப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காண முடியும். நான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற விரைந்து நடவடிக்கை எடுப்பேன். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைக்கவும் வேண்டும்' - என்றார். (அ-ம-22)

## தமிழர்களின்...

யின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்கு மக்கள் மீது ஜனாதிபதிக்கு உண்மையான கரிசனை இருந்தால் அவர் வவுனியாவில் வைத்து வழங்கிய வாக்குறுதிகளை எதிர்வரும் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு முன்னர் நிறைவேற்றிக் காட்டட்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சவால் விடுத்தார்.

வடக்கின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தயார் என்றும், 75ஆவது சுதந்திர தின விழாவின் போதாவது இந்நாட்டின் அனைத்து மக்களும் ஒரு தாயின் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டும் எனத் தான் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் செயற்படும், வடக்கு மாகாண அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலுவலகத்தை கடந்த சனிக்கிழமை வவுனியாவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கு மாகாணத்துக்கு நான் விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். அங்குள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் செல்லவுள்ளேன். வடக்கு மக்கள் படும் இன்னல்களை நான் நேரில் ஆராயவுள்ளேன். ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சியமைத்தால் அவர்களின் பிரச்சினைகளுக்கு நான் விரைந்து தீர்வு காண்பேன். வடக்கு மக்களுக்கு நான் என்றுமே நன்றியுடையனவாக இருக்கின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வாக்குகளை எனக்கு அவர்கள் வழங்கினார்கள்' - என்றார். (அ-ம-22)

## பட்ஜெட்டுக்கு...

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக்கூடிய போதே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் கூட்டணியும் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகவே இன்று வாக்களிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

## தேசிய...

டுள்ளது என்று பதிவாளர் நாயகம் பிரசாத் அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமூகத்தில் தற்போது காணப்படும் விவகாரங்கள் மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், தேசிய இனம் தொடர்பான சொற்பதத்தை அகற்றுவதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரத்துக்கு ஏற்ப பிறப்புச் சான்றிதழில் மாற்றங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழை ஒருவர் தனது தாய்மொழியில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## மாவீரர்...

34 கல்வெட்டுக்கள் 17 மாவீரர்களின் பெற்றோரால் இவ்வாறு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் அவை நவம்பர் 27ஆம் திகதி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுக்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பலநூறு மக்கள் சுடரேற்றியும் மலர்தூவியும் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். இந்தக் கல்வெட்டுக்களில் இடம்பெறத் தவறிய மாவீரர்களின் பெயர்களை உரிய முறைப்படி இணைப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளையில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு, தமிழர் தாயகத்தில் நேற்றுப் பல்வேறு மாவீரர் துயிலு மில்லங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26,125)

## மீனவர்கள்...

ணெய் தட்டுப்பாடு, எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை, மீனவர் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தனது உரை முடிவடையும்போது, இன்று சர்வதேச மீனவர் தினமாகும். ஆனால் மீனவர்கள் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றனர். அதனால் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வு நிறைவடையும் வரையில் சபையில் உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவேன் என்று தெரிவித்து சபையின் நடுவில் சென்று கீழே அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தார்.

சிறிது நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் அசோக்க அபேசிங்க ஆகியோர் சபை நடுவே வந்து திலீப் வெதஆராச்சியை சமா தானம் செய்து அவரின் ஆசனத்துக்கு அழைத்துச் சென்றனர். (அ-ம)

## ரயில்...

பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். செல்வமதாஸ் (வயது- 43) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## போதைப்பொருள்களுடன் ...

லும், உயிர்கொல்லிப் போதைப்பொருள்களான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் உள்ளிட்டவற்றுடன் ஆறு பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட போதைத் தடுப்புப் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் நடத்திய சிறப்புச் சுற்றிவளைப்பிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## போதை

னர். அவர்களில் ஒருவர் பெண். சந்தேகநபரான பெண்ணிடம் இருந்து 40 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. ஆண்களிடம் இருந்து முறையே 10 மற்றும் 8 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-26,23)

## சிறுமி...

யைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 26 வயதேயான சகோதரன் கைதுசெய்யப்பட்டுள்ளார். 16 வயதேயான குறித்த சிறுமி தனிமையில் இருந்தமையைச் சாதகமாகப் பயன்படுத்திய மேற்படி சகோதரன், அந்தச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-18)

## போதைமாத்திரை...

ரத்து 299 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் தொடர்பான பயிற்சி வகுப்புகளை நடத்துபவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவீரர்களின் பெற்றோர் முல்லையில் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு - உடையார்கட்டு பிரதேச நினைவேந்தல் கட்டமைப்பின் ஒழுங்கமைப்பில் உடையார்கட்டு பிரதேசத்தில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

உடையார்கட்டு பிரதேசசபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மாவீரர்களின் நினைவுப்பதாகைக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர்.

நிகழ்வில் 'பொ-பொ' பேரணி இயக்கத்தின் பிரதம இணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், வடக்கு - கிழக்கு முன்னேற்றக் கழகத்தின் தலைவர், சமூகச் செயற்பாட்டாளர்கள், மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-19)

# வலி.தென்மேற்கு சபையின் மீள்மதிப்பீடுகள் நிறைவு

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் 14 வருடங்களின் பின்னர் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் உப பட்டின அலுவலகத்தால் மீள் மதிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் 14 வருடங்களின் பின்னர் மீள் மதிப்பீடு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தினூடான மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் கடந்த 1976 ஆம் ஆண்டு முதல் 46 வருடங்கள் இடம்பெறாதிருந்த நிலையில், தற்போது மாதகல் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகத்தின் மூலம் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் வரி, நில மதிப்பீடு, பதிவுகள் என பல இன்னல்களை பிரதேசமக்கள் எதிர்கொண்ட நிலையில் அனைத்துப் பிரச்சினைகளும் மீள்மதிப்பீடு மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று வலி.தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார். (ஒ-14,125)

# இணைய விற்பனையாளர்களது வங்கிக் கணக்குகளில் மோசடி!

## பொலிஸார் எச்சரிக்கை



**கொழும்பு, நவ.22**

**இலங்கையில் இணையம் மூலம் பல்வேறு பொருள்களை விற்பனை செய்வதற்காக விளம்பரங்களை வெளியிடுவோரின் வங்கிக் கணக்குகளில் நுட்பமாக நுழையும் கும்பல் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.**

இதுவரையில் 60 லட்சம் ரூபாவை மோசடி செய்த கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணையம் மற்றும் ஊடுருவல் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒன்லைன் ஊடாக வர்த்தகம் செய்யும் சுமார் இருபது பேர் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் பின்னர் கண்டி, தலத்துஓயா, மதவாச்சி போன்ற பிரதேசங்களில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்வதாக இணையத்தில் பதிவிடப்பட்டிருக்கும் விளம்பரத்தை அவதானிக்கும் கொள்ளையர்கள் அதில் இருக்கும் இலக்கத்துக்கு தொடர்புகொள்கின்றார்கள். தாங்கள் இந்தப் பொருளை கொள்வனவு செய்யவுள்ளதாகக் கூறும் அவர்கள், கொள்வனவை உறுதி செய்யும் வகையில் அதற்கு முற்பணம் வழங்குகின்றோம் என்று கூறுகின்றனர். அதன் பின்னர் விற்பனையாளர்களின் வங்கிக் கணக்குகளின் விவரங்கள் உள்ளிட்ட ஏனைய விவரங்களை பெற்றுக் கொண்டு மோசடி செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொருளை விற்பனை செய்யும் நபரின் வங்கி கணக்குக்குள் நுழைவதற்காக கணக்கு உரிமையாளர்களின் வங்கிக்கு வரும் ஓபிரி இலக்கத்தை நுட்பமாகப் பெற்றுக் கொள்கின்றனர் என்று தெரியவந்துள்ளது. அந்த கணக்கில் உள்ள பணத்தை தங்கள் கணக்குக்கு மாற்றிக் கொள்கின்றார்கள்.

அதற்காக வேறு நபர்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி மோசடியாளர்கள் புதிய கணக்குகளை ஆரம்பித்துள்ளனர் என்பதும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, நவ. 22

பளை இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம், எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடப்பு வருட நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)


யா/ நடேஸ்வரக் கல்லூரி
காங்கேசன்துறை
கனகசபை தனபாலசிங்கம்
ஞாபகார்த்தமாக
நிர்மாணிக்கப்பட்ட
விளையாட்டு அரங்கு
திறப்பு விழா
காலம் : 24.11.2022 வியாழக்கிழமை
நேரம் : 12.15 மணி
அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்
பாடசாலைச் சமூகம்
CS 21946


# தெங்குச் செய்கைக்கு 10 ஏக்கர் காணி

## வலி.தென்மேற்கு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 22

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு கல்லுண்டாய் வெளியில் 10 ஏக்கர் காணி வழங்க வலி.தென்மேற்குப் பிரதேசசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேசசபை அமர்வு சபையின் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக 10 ஏக்கர் காணி கோரப்பட்டிருந்த விடயம் சபையில் முன்வைக்கப்பட்டது.

சபையின் உறுப்பினர்களின் ஒருமித்த தீர்மானத்தின் அடிப்படையில் கல்லுண்டாய் பகுதி யில் 10 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளப்படுத்தப்பட்டு சண்டிலிப்பாய் பிரதேசசெயலருக்கு நிலத்தை வழங்க சபையால் ஏகமனதாக பரிந்துரை செய் யப்பட்டது. (ஒ-14,125)


காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு.
- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.
தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.